உன்னை தேடும் இயேசு !

உங்கள் வாழ்க்கையை வளமாக்கும்
வல்லமையான தேவ செய்தி

சாம்ஜெபத்துரை

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வழியில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

உன்னைத் தேடும் இயேசு!

(SEEKING SAVIOUR)

J. சாம் ஜெபத்துரை

வெளியிடுபவர்
J. சாம் ஜெபத்துரை
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு
கோடம்பாக்கம், சென்னை - 600 024

முதற் பதிப்பு : ஆகஸ்டு 1992
நன்கொடை ரூ. 5/-
வெளியீடு எண் : 310

(இது சகோதரன் சாம் ஜெபத்துரை அவர்கள் பிரசங்கித்த தேவ செய்தியாகும்)

இந்த புத்தகத்தை வெளியிட உதவி செய்தவர்களை வாழ்த்துகிறோம், ஆசீர்வதிக்கிறோம்.

Mrs Baskaran & Family,
Riyadh K S A

கர்த்தர் சீயோனிலிருந்து அவர்களை ஆசீர்வதிப்பாராக.

அச்சிட்டோர்:-
ஒரேப் ஆர்ட் பிரிண்டர்ஸ்
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு
கோடம்பாக்கம், சென்னை - 600 024.

உன்னைத் தேடும் இயேசு!

''இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்'' (லூக் 19:10).

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, இந்த மாலை வேளையிலே தெய்வீக பிரசன்னமும் சமுகமும் நம் மத்தியிலே நிறைவாய் இருக்கிறது. நம் அருமை ஆண்டவர் நம்மோடு இருப்பது நமக்கு எத்தனை பெரிய பாக்கியம். அவர் நம்மோடு இருப்பதுதான் நம்முடைய பெலன். அவர் நம்மோடு இருப்பதுதான் நம்முடைய மேன்மை

என்னுடைய நாமத்தை பிரஸ்தாபப்படுத்துகிற எந்த ஸ்தானத்திலும் நான் வந்து உங்களை ஆசீர்வதிப்பேன் என்று அவர் சொல்லியிருக்கிறார். ஆகவே நிச்சயமாகவே அவர் நம்முடைய மத்தியில் இருக்கிறார் இரண்டுபேர் அவருடைய நாமத்தினாலே கூடி வந்தாலும்போதும் அவர் அவர்களுடைய மத்தியிலே ஓடி வந்து விடுகிறார். ஆகவே செய்தியைக் கேட்பதற்கு முன்பாக உங்களுடைய மனக் கண்கள் நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை தரிசித்துக் கொண்டே இருக்கட்டும். ஆவியானவர் நம்முடைய மத்தியிலே அசைவாடுகிறதை உணர்ந்து அவரைத் துதியுங்கள்.

இந்த வசனத்தை சற்று சிந்தித்துப் பாருங்கள். இழந்துபோனதை தேட இயேசு உலகத்திற்கு வந்தார். பரலோக தேவன் பரலோக மேன்மையை உதறிவிட்டு பூமிக்கு இறங்கி வர காரணம் என்ன? தேவதூதர்கள் மத்தியிலே ஆராதிக்கப்பட்ட தேவாதி தேவன் பரலோகத்தை வேண்டாம் என்று உலகத்தில் இறங்கிவர காரணம் என்ன? நமக்காக அடிமையின் ரூபம் எடுத்த இரகசியம் என்ன? பிதாவின் மடியிலே செல்ல பிள்ளையாய் இருப்பவர் நமக்காக தம்மைத்தாமே தரித்திரராக்

கிக் கொண்டதின் காரணம் என்ன? பாரமான சிலுவையை சுமந்ததின் நோக்கம் என்ன? நமக்காக கடைசி சொட்டு இரத்தத்தையும் ஊற்றிக் கொடுத்ததின் உள் அர்த்தம் என்ன?

வேதம் அதற்கு பல காரணங்களை சொல்லுகிறது ஒரு வசனம் பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்திற்கு வந்தார் என்று சொல்லுகிறது. இன்னொரு வசனம் உலகத்தை அவர் ஆக்கினைக்குள்ளாக தீர்க்காமல் உலகத்தை மீட்கும்படியாக தம்மைத்தாமே ஒப்புக் கொடுக்க வந்தார் என்று சொல்லுகிறது. இன்னொரு வசனம் சொல்லுகிறது பிசாசின் கிரியைகளை அழிக்கும் படியாக தேவகுமாரன் வந்தார் என்று சொல்லுகிறது.

இன்னொரு வசனம் சொல்லுகிறது அவர் சத்தியத்திற்காக சாட்சி கொடுக்க பிறந்தார் அதற்காகவே இந்த உலகத்திற்கு வந்தார் என்று சொல்லுகிறது. இன்னொரு வசனம் சொல்லுகிறது அவர் பூமியிலே அக்கினியை போட வந்தார். இப்பொழுதே அது பற்றி எறிய வேண்டுமென்று விரும்புகிறார். இப்படி ஏராளம் வசனங்கள் இயேசு பூமிக்கு வந்ததின் நோக்கத்தை நமக்கு தெளிவுபடுத்திக் கொண்டிருக்கிறது ஆனால் இன்றைக்கு வேதத்தை வாசிக்கும்போது இழந்து போனதைத் தேடி வந்த இயேசுகிறிஸ்துவைக் குறித்து நாம் அறிந்துகொள்ளப் போகிறோம்.

உங்களுடைய மனக்கண்களுக்கு முன்பாக இழந்து போனதைத் தேடுகிற இயேசுவின் முகம் எப்படி இருக்கும் என்பதை சற்று சிந்தித்து பாருங்கள். பணத்தை இழந்தவர்கள் தேடுவதை பார்த்திருக்கிறீர்களா? தன் பிள்ளையை காணாமல் போனதை தாய் தேடும்போது தாயின் முகம் எப்படியிருக்கும் என்பதை கவனித்திருக்கிறீர்களா? கவனித்திருப்பீர்கள் என்றால் இழந்துபோனதைத் தேடும் இயேசுவின் முகம் எப்படி இருக்கும் என்பதை உங்களால் சிந்தித்து பார்க்க முடியும்.

ஆம், அவர் துக்கம் நிறைந்தவர் என்று வேதம் சொல்லுகிறது அசட்டை பண்ணப்பட்டவர், மனுஷ ரால் புறக்கணிக்கப்பட்டவர் மட்டுமல்ல, துக்கம் நிறைந் தவர். இழந்துபோன மனிதனை துக்கத்தோடுகூட தேடி நடக்க ஆரம்பித்தார். கப்பர்நகூமிலே, எருசலேமிலே, யூதேயாவிலே துக்கம் நிறைந்தவராய் மனுமக்களை தேடி நடந்தார்

காணாமல்போன ஆடுகளைப் போல இருந்த மக்களை தேடிதேடி நடந்தார். பசியோடும் தாகத்தோடும் இரவும் பகலும் ஜனங்களை மீட்கும்படி தேடி நடந்தார்,

இந்த மாலை வேளையிலே நம்முடைய அருமை ஆண்டவருக்கு நேராக உங்களுடைய உள்ளத்தை திருப்பவேண்டுமென்று விரும்புகிறேன் நீங்கள் அவரை ஆவியிலே தரிசிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். அவர் எவ்வளவு துக்கமுடையவராய் தேடி இந்த பூமிக்கு வந்தார் என்பதை நீங்கள் உணர வேண்டுமென்று விரும்புகிறேன். இழந்துபோனதைத் தேடுகிற அவருடைய உள்ளம் எவ்வளவு வேதனையினால் நிரம்பியிருக்கும் என்பதை உங்கள் சிந்தனைக்கு முன்பாக நிறுத்த பிரியப்படுகிறேன்.

''அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால் அவர்கள்மேல் மனதுருகினார்'' (மத் 9:36).

இழந்துபோன ஒரு சமாரிய ஸ்திரீயைத் தேடி மத்தியான வெயில் என்றும் பாராமல் நடந்து, சீகாரின் கிணற்றோரம் காத்து நின்றார். முப்பத்தியெட்டு ஆண்டுகளாய் பெதஸ்தா குளத்தண்டை படுத்துக்கிடந்த ஒரு வியாதியஸ்தனைத் தேடும்படி எருசலேமிலுள்ள ஆட்டு வாசலினருகே கடந்து வந்தார். சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டு, அற்பமாய் எண்ணப்பட்ட சகேயுவைத்தேடி இரட்சித்துக்கொள்ளும்படி காட்டத்தி மரத்தை ஆவலோடு நோக்கிப் பார்த்தார்.

ஒரு ஆடாவது காணுமல் போவதை அவர் விரும்பு வது இல்லே. இழந்து போக விருப்பமில்லாத அவர் இன் றைக்கும் தேடிக்கொண்டே இருக்கிறார். அந்த வசனத்தை மீண்டும் சிந்தித்துப் பாருங்கள். கிறிஸ்துவின் அங்க லாய்ப்பை நீங்கள் அறிந்துகொள்வீர்கள். அவருடைய பெருமூச்சு உங்களுடைய காதுகளில் கேட்கும். இழந்து போனதைத் தேடுவது என்பது எத்தனே கடினமான ஒரு காரியம்!

எங்களுடைய கிராமத்தில் பூக்களைத் தொடுத்து விற்கிற ஒரு தாயை எனக்குத் தெரியும். அவளை நாங்கள் பண்டாரத்தி என்று அழைப்பதுண்டு. அவள் தன் தோட் டத்திலே பூக்களைப் பறித்து சரமாகத் தொடுத்து, காலே வேளையிலே தெருத் தெருவாக நடந்து அந்த பூக்களை விற்பது உண்டு. அதில் கிடைக்கிற வருமானத்தைக் கொண்டுதான் அவள் தன் வயிற்றை நிரப்புவது மட்டு மல்ல, குடும்பத்தையும் நடத்தினுள்.

அவளுக்கு நிறைய குழந்தைகள்; ஆறு குழந்தைகள் என்று எண்ணுகிறேன். என்றாலும் அவள் பூ விற்க வரும் போது அவளுடைய கடைசி குழந்தை தாயினுடைய முந்தானையைப் பிடித்துக்கொண்டு தெருவிலே நடந்து வரும். தாய் எந்தெந்தத் தெருக்களுக்குச் செல்கிறுளோ அந்தக் குழந்தையும் சோர்வில்லாமல் அந்தத் தெருவிலும் கூட நடக்கும் அந்தத் தாயையும் குழந்தையையும் பிரிக்க முடியாத அளவு அவ்வளவு நெருக்கமாய் அவர்கள் காணப்படுவார்கள்

ஆனுல் திடீரென்று ஒரு நாள் அந்தக் குழந்தை காணு மல் போய்விட்டது. எப்படித்தான் அந்தக் குழந்தை தவறினதோ, யார்தான் அந்தக் குழந்தையைக் கடத்திக் கொண்டு சென்றுர்களோ, தெரியவில்லே.

குழந்தையைக் காணேம் என்று தெரிந்தவுடன் அந்தத் தாயினுடைய அங்கலாய்ப்பும் அழுகையின் கூக்குரலும் வார்த்தையால் வர்ணிக்க முடியாததாய் இருந்தது. அவள்

நெஞ்சிலும், வாயிலும், வயிற்றிலும் அடித்துக்கொண்டு பரிதாபமான முகத்தோடு தெருத் தெருவாக அந்தக் குழந்தையைத் தேடினாள். துயரமான குரலில் அந்தக் குழந்தையின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டு கதறினாள். எங்கேயாவது சிறுபிள்ளைகளின் கூட்டத்தை அவள் கண்டால் உடனே அங்கே ஓடிச்சென்று தன்னுடைய பிள்ளை அங்கே நிற்கிறதா என்று தேடுவாள்.

ஒரு கிராமம் மட்டுமல்ல, பல கிராமங்கள் தேடித் தேடி அலைந்தாள். உணவை மறந்தாள், தூக்கத்தை தூரப்படுத்தினாள், இழந்துபோனதைத் தேடித்தேடி கதறினாள்.

பல வாரங்கள் சென்றபடியினால் அவள் மெலிந்து எலும்பும் தோலுமாய் மாறி தள்ளாட ஆரம்பித்தாள். அவள்மேல் அக்கறைகொண்ட கிராம மக்கள் அவளைப் பார்த்து; ஒரு பிள்ளையை நினைத்து நினைத்து இவ்வளவாய் அழுதுகொண்டிருக்கிறாயே! மற்ற பிள்ளைகளுடைய நிலைமை என்ன? அவர்களைக் காக்க வேண்டிய கடமை உனக்கு உண்டல்லவா? நீ இந்தப் பிள்ளையைத் தேடுகிறதை விட்டுவிட்டு மற்ற பிள்ளைகளைக் கவனிக்கும் வழியைப்பார் என்று சொன்னபோது அவளோ கேட்கவில்லை. ''ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்; எனக்கு ஆறு பிள்ளைகள் இருந்தாலும் அத்தனை பிள்ளைகளும் எனக்கு வேண்டும். என்னுடைய பிள்ளையை நான் இழந்துபோக விருப்பப்படவில்லை. என் பிள்ளை எனக்கு வேண்டும்'' என்று கதறினாள்

ஒருவேளை அவளுடைய உள்ளம் காணாமல் போன குழந்தைக்கு ஏற்படும் கஷ்டங்களையெல்லாம் எண்ணி பார்த்திருக்கக்கூடும். என் பிள்ளையை எந்த பிச்சைக்காரன் பிடித்துக்கொண்டு போனானோ தெரியவில்லை. பல வேளைகளில் சிறுபிள்ளைகளை பிச்சைக்கார கும்பல்கள் பிடித்துக் கொண்டுபோய் பிள்ளைகளின் கண்களைத் திறந்து அதில் மிளகாய் பொடியைத் தூவி, கரப்பான்

பூச்சியை உள்ளே வைத்து கட்டி, அந்த கரப்பான் பூச்சி கண்களைத் துளைக்கிறதினால் அந்தக் கண்கள் இரத்தக் குளமாகி குருடான பின்பு, அந்தக் குழந்தையை அதிகமான விலைக்கு மற்ற பிச்சைக்காரர்களுக்கு பிச்சை எடுத்துக் கொடுக்கும்படி விற்பது உண்டல்லவா?

இன்னும் சில பிள்ளைகளை கைகளை கால்களை முறித்து முடமாக்கி, முடமான பிள்ளைகள் அதிகமான பிச்சை எடுத்துகொடுக்கும் என்பதற்காக விற்பது உண்டல்லவா? அல்லது என் பிள்ளையைத் தூர தேசத்திற்கு கொண்டு போய் அங்கே அடிமை வேலை செய்ய பழக்குகிறார்களோ என்னவோ தெரியவில்லையே, என் பிள்ளை எங்கே என்ன நிலைமையில் இருக்கிறதோ என்று கதறிக்கொண்டே இருந்தாள்.

தேவபிள்ளையே, இழந்துபோனதைத் தேடி வந்த இயேசுகிறிஸ்துவின் நிலைமையும் அந்தத் தாயின் நிலைமையைப்போலத்தான் இருந்திருக்கும்! அவர் தாயைவிட அன்பில் சிறந்தவர் அல்லவா? கர்ப்பத்தின் ஸ்திரீயானவள் தன் பிள்ளையை இழக்கும்போது ஒருவேளை அந்தத் தாய் கூட மறந்துவிடலாம். ஆனால் கர்த்தர் மறப்பதில்லை அல்லவா?

சாத்தான் அநேக மக்களை வஞ்சித்து அவர்களை நரகத்திற்குள்ளே, பாதாளத்திற்குள்ளே இழுத்துச் செல்லும் போது அவருடைய உள்ளம் எவ்வளவு வேதனைப்படும்! உலகத்தின் உல்லாசங்களைக் காட்டி ஆத்துமாவை அழிக்க கொடிய பிசாசானவன் வஞ்சகமாய்க் கொண்டுசென்று கொண்டிருக்கும்போது கர்த்தரால் அதை எப்படி தாங்கிக் கொள்ள முடியும்? இழந்துபோனதைத் தேடும்படி பூமிக்கு வந்த ஆண்டவருடைய முகத்தை நோக்கிப் பாருங்கள்.

எங்கள் கிராமத்திலுள்ள அந்த பண்டாரத்தி ஏறக்குறைய ஒரு மாதத்திற்குப் பிறகு தூரமான ஒரு ஊரிலே தன் குழந்தையை எலும்பும் தோலுமாககண்டுபிடித்தாள்.

அந்தக் குழந்தை தன்னுடைய கையில் ஒரு சிறு சிரட்டையை வைத்துக்கொண்டு பிச்சை எடுத்துக்கொண்டிருந்தது. அந்தக் குழந்தையைக் கண்ட தாய் ஓடிப்போய் தன் பிள்ளையை அரவணைத்துக்கொண்டாள் அவளுடைய சந்தோஷம் தாங்க முடியாத ஒரு சந்தோஷம்! அந்தக் குழந்தையைத் தலையின்மேல் தூக்கிக்கொண்டு மகிழ்ச்சியோடு வீடு திரும்பினாள்.

மனந்திரும்புகிற ஒரு பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்குமே. கர்த்தர் சொல்கிற இரகசியம் இதுதான். இழந்துபோனதை அவர் தேடி கண்டுபிடிக்கும்போது, பாதாளத்தின் பிடியிலிருந்து ஒரு ஆத்துமாவை அவர் இரட்சித்துக்கொள்ளும் போது அவருடைய சந்தோஷமும் தாங்க முடியாததாகவே இருக்கும்!

சில நாட்களுக்கு முன்பு கர்த்தர் இந்த வசனத்தை எனக்குக் கொடுத்தபோது என் உள்ளத்திலே பெரிய பாரத்தையும் வைத்தார். நான் அதிகாலை வேளையில் அருகிலுள்ள ஒரு ஆலயத்திற்குச் சென்று ஜெபிக்கும்போது மீண்டும் ஆண்டவருடைய முகத்தை இழந்துபோனதைத் தேடுகிற முகமாக தரிசித்தேன். என்னுடைய ஆவியிலே, ஆர்சப் நிறைந்த அவருடைய முகத்தைக் காணும்படி கர்த்தர் என் உள்ளக் கண்களைத் திறந்தார். இன்றைக்கும் அவர் கிராமங்கள் தோறும், பட்டணங்கள் தோறும் நடந்து நடந்து காணாமல் போன ஆட்டைத் தேடுகிற தைப்போல, தாய் தன் பிள்ளையைத் தேடுகிறதைப் போல அவர் ஆவலோடு தேடிக்கொண்டே இருக்கிறார்!

தேவபிள்ளையே, அவர் உன்னை இழக்க ஒருபோதும் சம்மதிப்பதே இல்லை. நீ அவருக்கு தேவை! உன்னுடைய ஆத்தும மீட்பு அவருடைய பார்வைக்கு விலையேறப் பெற்றது! உன்னைத் தேடி அவர் வந்திருக்கிறார்!

ஒருவேளை நீ அவரை புறக்கணித்திருக்கலாம். அவரை அசட்டை செய்திருக்கலாம். அவரை வேண்டாம் என்று

தள்ளியிருக்கலாம். ஆனால் அவருடைய நேசத்தின் ஆழம் இன்றைக்கு உன்னைத்தேடி வந்திருக்கிறது என்பதை மறந்துபோகாதே! ஆம், நீ அவருக்குத் தேவை!

''எப்பிராயீமே, நான் உன்னை எப்படிக் கைவிடுவேன், இஸ்ரவேலே, நான் உன்னை எப்படி ஒப்புக்கொடுப்பேன், என் இருதயம் எனக்குள் குழம்புகிறது; என் பரிதாபங்கள் ஏகமாய் பொங்குகிறது'' என்று கதறுகிறார் (ஓசியா 11:8)

''ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை'' (ஏசாயா 49:15) என்று உன்மேல் அவருக்குள்ள அக்கறையை வெளிப்படுத்துகிறார்.

அருமையான தேவனுடைய பிள்ளையே, நீ ஒருவேளை கர்த்தரை அன்புள்ளவர் என்று அறிந்திருக்கலாம். God is Love என்பதை எல்லாரும் சொல்கிறார்கள். ஆனால் நம்முடைய ஆண்டவர் அன்புக்காக ஏங்குகிற ஆண்டவர், நம்முடைய அன்பை எதிர்பார்க்கிறவர் என்பதை நாம் அறிந்திருக்கிறோமா? அவர் நம்மைத்தேடி துக்கத்தோடு நடந்து வருகிறவர் என்பதை சிந்தித்திருக்கிறோமா? தம்முடைய கால்களில் எல்லாம் இரத்தம் வழிய வழிய கல்லுகளிலும் முள்ளுகளிலும் நடந்து நடந்து அவர் நம்மைத் தேடி வந்திருக்கிறதை உணருகிறோமா?

நாம் அவரை ஸ்தோத்தரிக்க மாட்டோமா, துதிக்க மாட்டோமா என்று நம்மேல் பாசத்தை எதிர்பார்க்கிறவராய் அவர் இருக்கிறார்.

நம்முடைய ஆண்டவர் ஆதியிலிருந்தே துக்கமுடையவராகவே இருந்ததால்தான் தாம் சிருஷ்டித்து தெரிந்துகொள்ளப்பட்ட கேருபாகிய விடிவெள்ளி விழுந்தபோது அந்த வீழ்ச்சியை அவரால் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை. அவர் அவனை மிகவும் மேன்மைப்படுத்தி, மகிமைப்படுத்தியிருந்தார். ஆனால் அவனோ கர்த்தருக்

விரோதமாய் எழும்பி பெருமை பாராட்டினபடியாலே அவனை பரலோகத்திலிருந்து தள்ள வேண்டியதாயிற்று.

அந்த துக்கத்தை நிவிர்த்தி செய்யும்படியாய் கர்த்தர் மனுஷனை உருவாக்கினார். கை களிமண்ணிலிருந்து அவனை உருவாக்கி ஜீவ சுவாசத்தை அவன்மேல் ஊதி அவனை ஜீவாத்துமாவாக்கினார்.

பகலின் குளிர்ச்சியான வேளையிலே ஏதேன் தோட்டத்தில் இறங்கி உலாவுவது அவருடைய வழக்கமாய் இருந்தது. மனுமக்களோடு அநுதினமும் சம்பாஷிப்பது அவருக்கு பெரிய மகிழ்ச்சியாய் இருந்தது. அந்த உறவு இனிமையானதும் மேன்மையானதுமாய் இருந்தது. அந்த உறவை எண்ணி ஏங்கி எதிர்பார்த்த தேவனுக்கு ஒரு நாள் ஒரு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது காரணம், சாத்தான் ஆதாமையும் ஏவாளையும் வஞ்சித்து இழுத்துக்கொண்டு போய்விட்டான். ஆண்டவர் புசிக்கக்கூடாது என்று கட்டளையிட்ட விலக்கப்பட்ட கனியை அவனுக்குக் காட்டி ஆசையைத் தூண்டிவிட்டு புசிக்கும்படி செய்துவிட்டான்.

அன்புள்ள ஆண்டவர் அன்றைக்கு ஆதாமை இழந்தார். ஆதாமோடு உறவாட அவர் இறங்கி வந்தபோது அங்கே அவனைக் காணுமல் அவருடைய உள்ளம் உடைந்தது.

என்னுடைய மனமகிழ்ச்சியின் பாத்திரமாயிருந்த "ஆதாம் எங்கே?" என்று அவர் தேடினார். என்னோடு உறவாடுகிற ஆதாமைத் தேடியும் காணோமே என்று அங்கலாய்த்தார். அவருடைய உள்ளம் புண்பட்டது, உடைந்தது.

இழந்துபோனதைத் தேடி வந்த ஆண்டவர் அந்த ஏதேன் தோட்டத்திலே தனியாய் நின்று, "ஆதாமே, நீ எங்கே இருக்கிறாய்?" என்று கதறினார்! "ஆதாமே எங்கே இருக்கிறாய்?" அது எத்தனை கதறலான வார்த்தை என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். இழப்பை தாங்கக்கூடாத

பாசமுள்ள தகப்பனின் அழுகையின் கூக்குரலாக ஏதேன் தோட்டத்தில் அது எதிரொலித்திருக்க வேண்டும்.

ஒரு அருமையான வாலிப சகோதரனை நான் அறிவேன். பக்தியுள்ளவனாக சிறந்தோங்கி வளர்ந்தான். கர்த்தருடைய ஊழியத்தை உற்சாகமாய் செய்ய ஆரம்பித்தான். சில மாதத்திற்கு முன்பு ஸ்கூட்டரிலே ஒருநாள் அவன் வந்துகொண்டிருக்கும்போது லாரி அவன்மேல் மோதி, ஆபத்தான நிலைமையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தான். ஆனால் அவனுடைய நிலைமை மரணப் போராட்டமாய் இருந்தது. வாழ்க்கையின் எல்லைக்கு அவன் வந்துவிட்டான்

அவன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட செய்தியைக் கேட்டவுடன், அவனைப் பார்த்து ஜெபிப்பதற்காக விரைந்து சென்றேன். ஆனால் அதுவே அவனுக்கு கடைசி மணிநேரமாகிவிட்டது. நான் அவனுடைய அருகில் சென்றபோது அவனுடைய கடைசி மூச்சு நின்று போனது.

நான் சென்ற ஒரு சில விநாடி நேரத்திற்குள் அவனுடைய தகப்பனார் ஆஸ்பத்திரியின் படிகளைத்தாண்டி ஏறி ஓடி வந்தார். அவருடைய மகன் மரித்துப்போனதை அவரிடத்தில் சொன்னபோது அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. தன்னுடைய மகனுடைய பெயரைச்சொல்லி கூப்பிட்டு, ''என் மகனே, நீ எங்கே இருக்கிறாய்? என் மகனே, நீ எங்கே இருக்கிறாய்?'' என்று தேம்பித் தேம்பி அழுதார்.

பாசமுள்ள அந்த தகப்பனின் அழுகுரலைக் கேட்ட போது அன்று ஏதேன் தோட்டத்தில், ''ஆதாமே நீ எங்கே இருக்கிறாய்?'' என்று ஆண்டவர் கதறின கூக்குரலின் துயரத்தை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது!

தேவபிள்ளையே, நீ எங்கே இருக்கிறாய்? நீ எங்கே இருக்கிறாய்? தேவனுடைய அன்பை இழந்துபோனாயோ?

ஆதி அன்பை இழந்துபோனாயோ? கர்த்தரிடத்தில் ஐக்கியத்தை இழந்துபோனாயோ? நீ எங்கே இருக்கிறாய்?

மனந்திரும்புகிற ஒரே பாவிநிமித்தமாக பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும்! இன்று உன்னிமித்தம் பரலோகத்தில் பெரிய மகிழ்ச்சி ஏற்படுகிறது. நீ கர்த்தருடையவன். கர்த்தர் உன்னுடையவர். ஆமென்; அல்லேலூயா!

இந்த மாலைவேளையிலே லூக்கா எழுதின சுவிசேஷம் 15-ம் அதிகாரத்திலிருந்து மூன்று இழப்புகளைக் குறித்தும், இழந்துபோனதை எப்படித் தேடினார்கள் என்பதைக் குறித்தும் உங்களோடுகூட கர்த்தருடைய செய்தியை பகிர்ந்துகொள்ள பிரியப்படுகிறேன். முதலாவது மேய்ப்பன் ஒரு ஆட்டை இழந்தான். அடுத்தது ஒரு ஸ்திரீ வெள்ளிக் காசை இழந்தாள். மூன்றாவது அன்புள்ள தகப்பன் தன் மகனை இழந்தான். ஒரே அதிகாரத்தில் இந்த மூன்று இழப்புகள் வருகிறது மாத்திரமல்ல, இழந்ததைத் தேடி பெற்றுக்கொண்ட சரித்திரமும் எழுதப்பட்டு இருக்கிறது. இழந்து போனதைத் திரும்ப பெற்றுக்கொள்ளும்போது அவர்களுக்கு எத்தனை மகிழ்ச்சி உண்டாகி இருந்திருக்கும்!

தேவபிள்ளையே, நீ இழந்துபோனது என்ன? எல்லாவற்றையும் ஆண்டவர் உனக்குத் திரும்ப தர வல்லமையுள்ளவராய் இருக்கிறார். 1 சாமுவேல் 30-ம் அதிகாரத்தில் தாவீது தான் இழந்துபோன எல்லாவற்றையும் திரும்பப் பெற்றுக்கொண்டான் என்று வேதம் சொல்லுகிறது. அதுபோலவே இன்றைக்கு நீங்கள் பெற்றுக்கொள்ளப் போகிறீர்கள். இழந்துபோனதைத் தேடுகிற ஆண்டவர் உங்களுடைய இழப்பின் வேதனையை உணர்ந்து உங்களை ஆசீர்வதிப்பார்.

1. காணமல் போன ஆடு!

''உங்களில் ஒரு மனுஷன் நூறு ஆடுகளை உடையவனா யிருந்து, அவைகளில் ஒன்று காணமற்போனால், தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் வனாந்தரத்திலே விட்டு, காணமற்போன ஆட்டைக் கண்டு பிடிக்குமளவும் தேடித் திரியானோ?'' (லூக் 15:4)

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, உலகத்திலே பாதுகாப்பு இல்லாத ஒரு பிராணி ஒன்று உண்டென்றால் அது இந்த ஆடுதான். பாதுகாப்பான எந்த உபகரணங்களும் அதற்கில்லை. ஒரு தேளைப் பாருங்கள். அது தன்னை பாதுகாத்துக்கொள்ளும்படி கொடுக்கை வைத்து கொட்டி விஷத்தை இறக்கி விடுகிறது. பாம்பைப் பாருங்கள் பாம்புக்கு விஷப் பல் இருக்கிறது. அருகில் போனால் கொத்தி விடுகிறது மாட்டைப் பாருங்கள். கூரான கொம்புகள் இருக்கிறது. குத்தி வயிற்றை கிழித்து குடலை வெளியே கொண்டு வந்து விடுகிறது யானையைப் பாருங்கள் துதிக்கையை உயர்த்தி அடித்து காலின் கீழாய் போட்டு மிதித்து விடுகிறது. கழுதையைப் பாருங்கள் முன்னால் போனால் கடிக்கிறது பின்னால் போனால் உதைக்கிறது

ஆனால் இந்த ஆட்டைப் பாருங்கள். ஆடுக்கு விஷம் இல்லை விஷப்பல்லும் இல்லை. எந்த பாதுகாப்பும் இல்லாத சாதுவான மிருகமாய் விளங்குகிறது. ஆடு யாருக்கும் எந்த தீங்கும் விளைவிப்பது இல்லை. அதனால் ஏற்படுகிற நன்மைகளும், ஆசீர்வாதங்களும் எண்ணற்றவை! ஆனால் இந்த ஆட்டுக்குத்தான் எத்தனை விரோதிகள். ஆட்டைவிட மிக சிறியதான குள்ள நரிக்கூட எளிதாக ஆட்டை கொன்றுவிடும்.

குள்ள நரி என்ன செய்யும் தெரியுமா? ஆட்டு மந்தையின் கூடவே ஆடுகளில் ஒன்றைப்போல நடந்து செல்லும். ஆடுகளுக்கு பின்னாலே கீழே நடந்து திடீரென்று

ஆட்டின் தொண்டையை லபக் என்று கவ்விவிடும். ஆட்டின் நான்கு கால்களுக்குள்ளாக தன்னை மறைத்துக் கொண்டு தொண்டையை கடித்தபடியே மெதுவாக நடக்கும். தொண்டை கடிபட்டபடியால் ஆடு சத்தமிடாமல் குள்ளநரி நடத்துகிற திசையிலே மெதுவாய் நடந்து செல்லும். குள்ளநரி ஆட்டு மந்தையின் பின்பக்கமாய் நடந்து சென்று தனிமையான இடத்திற்கு கொண்டுபோய் இரத்தத்தைக் உறிந்து கொன்றுபோடும்.

இன்னும் ஆடுகளுக்கு விரோதியான ஓநாய்கள் உண்டு, சிங்கங்கள் உண்டு, புலிகள் உண்டு, கரடிகள் உண்டு. இவை யாவும் மிக வேகமாய் பலுகி பெருகக்கூடியவை. ஆடு ஒரு முறை ஒரு குட்டிப் போடுவதற்கு முன்பாக இந்த ஓநாய்கள் ஆறு குட்டிகளைப் போட்டுவிடும். ஆடு பெருகுகிறதைப் பார்க்கிலும் ஆட்டின் சத்துருக்கள் பத்து மடங்கு அதிகமாய் பெருகுகின்றன.

பாதுகாப்பு இல்லாத ஆடு தன் நிலைமையை உணராமல் தனக்கு இருக்கும் ஏராளமான ஆபத்துக்களைக்கூட எண்ணிப் பார்க்காமல் மேய்ப்பனை விட்டு தூரமாய் ஓடுகிறது. இக்கரைக்கு அக்கரை பச்சை என்ற பழமொழியின்படி பச்சை தெரிகிற இடங்களுக்கு எல்லாம் குதித்து துள்ளி ஓடுகிறது.

இன்றைக்கும் இக்கரைக்கு அக்கரை பச்சை என்று நினைக்கிற எண்ணற்ற உள்ளங்கள் உண்டு அல்லவா? கண்ட கண்ட சினிமா தியேட்டர்களுக்கு ஓடுகிற அவர்கள், கண்ட கண்ட பாவ சுமைகளுக்கும் இச்சைகளுக்கும் ஓடுகிற அவர்கள், வீடியோக்களுக்குப் பின்னாலும், டி. வி. களின் பின்னாலும் ஓடுகிற அவர்கள், உலக ஆசை இச்சைகளை நோக்கி ஓடுகிற அவர்கள் ஆங்காங்கே போய் வலைகளில் சிக்கிக்கொள்கின்றனர். காணாமல் போய் விடுகின்றனர்.

தங்களுக்கு ஒரு மேய்ப்பன் உண்டே! அவன் தங்கள் மேல் அக்கரைக்கொள்வானே! தன்னைக் கண்ணீரோ

தேடுவானே என்றெல்லாம் இந்த ஆடுகள் எண்ணிப் பார்ப்பது இல்லை.

ஏசாயா தீர்க்கதரிசி இந்த ஆட்டைப் பார்த்தார். மனுஷனையும் பார்த்தார். இரண்டையும் பார்த்துவிட்டு என்ன சொன்னார் தெரியுமா? "நாம் எல்லாரும ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்"

(ஏசாயா 53:6)

நல்ல மேய்ப்பன் ஆடுகளைத் தேடி வருகிறான். ஆடுகளுக்காக உத்தரவாதம் செய்கிறான். ஆடுகளுக்காக தன் உயிரைக் கொடுக்கவும் தயங்குவது இல்லை.

மேய்ப்பனாயிருந்த தாவீது, ராஜாவாகிய சவுலைப் பார்த்து சொல்லுகிற சந்தர்ப்பத்தைப் பாருங்கள். "உம்முடைய அடியான் என் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கிறபோது, ஒருவிசை ஒரு சிங்கமும் ஒருவிசை ஒரு கரடியும் வந்து, மந்தையிலிருக்கிற ஆட்டைப் பிடித்துக்கொண்டது நான் அதைத் தொடர்ந்துபோய் அதை அடித்து, அதை அதின் வாய்க்குத் தப்புவித்தேன் அது என்மேல் பாய்ந்தபோது, நான் அதின் தாடியைப் பிடித்து, அதை அடித்துக் கொன்றுபோட்டேன்"

(I சாமு 17:34,35)

தாவீது எத்தனை அருமையான மேய்ப்பனாய் இருந்திருக்கிறார்! தன் உயிரையும் பொருட்படுத்தாமல் ஆடுகளை எவ்வாறு பாதுகாத்திருக்கிறார்! இதுதான் ஒரு நல்ல மேய்ப்பனுடைய கடமை.

இழந்துபோனதைத் தேடும்படி வந்த ஆண்டவர் தன்னை ஆட்டைத் தேடுகிற ஒரு மேய்ப்பனுக்கு ஒப்பிட்டு கூறுகிறதை சிந்தித்துப் பாருங்கள். அவர் ஒரு உவமையைச் சொன்னார். ஒருவனுக்கு நூறு ஆடுகள் சொந்

மாய் இருந்தன. அதில் ஒரு ஆடு காணாமல் போனது என்றவுடனே தொண்ணூற்றொன்பது ஆடுகளை ஒரு இடத்தில் நிறுத்தி வைத்துவிட்டு காணாமல் போன ஒரு ஆட்டைத் தேடி நடந்தான்.

ஒருவேளை இந்த கூட்டத்தில் தொண்ணூற்றொன்பது நீதிமான்கள் இருக்கலாம். ஆனால் ஒருவேளை சகோதரனே, சகோதரியே, நீ தேவனை விட்டு தூரமாய் போன காணாமற்போன ஒரு ஆடாய் இருந்தால், உன்மேல் அவர் அதிக அக்கரையுள்ளவராய் உன்னைத் தேடுகிறார். உனக்காக மனதுருகுகிறார் என்பதை மறந்து போகாதே. நீ இருந்துபோன நிலைமையில் இருப்பது தேவனுக்கு பிரியமில்லை. தேவ சமூகத்தில் ஒரு அந்நியனைப்போல நிற்பது அவருக்கு பிரியமில்லை. நீ துக்கத்தோடும், வேதனையோடும், துயரத்தோடும் காணப்படுவது அவருக்கு பிரியமில்லை.

நீ ஆண்டவரிடத்தில் திரும்பி வரவேண்டுமென்று தேவன் உன்மேல் இரக்கமுள்ளவராயிருக்கிறார். உன்னுடைய பிரச்சனைகளை எல்லாம் மாற்றி ஆதி அன்புக்குள் கொண்டு வர வேண்டுமென்று அவர் எதிர்பார்க்கிறார். நீ அவரண்டை வருவாயா?

மேய்ப்பன் ஆட்டைத் தேடும்போது முதலாவது என்ன செய்வான் தெரியுமா? ஆம், அவன் குரல் கொடுப்பான். மேய்ப்பனின் குரல் ஆடுக்கு தெரியும். ஒவ்வொரு மேய்ப்பனும் தன்னுடைய ஆடுகளை ஒவ்வொருவிதத்தில் அழைப்பார்கள். அந்த குரலைக் கேட்டவுடன் அந்த ஆடு 'மே' என்று சத்தம் கொடுக்கும். மேய்ப்பனுடைய குரலை அழகாய் அந்த ஆடுகள் அறிந்திருக்கும் அந்த ஆடுகள் திரும்ப தனக்கு சத்தம் கொடுக்க வேண்டுமென்பதற்காக அந்த இடையன் சத்தமிட்டுக் கொண்டே ஆட்டைத் தேடிக்கொண்டிருப்பான்.

இயேசு சொன்னார், ''என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன்; அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது''

(யோவான் 10:27).

உன்னைத் தேடி வருகிற ஆண்டவர் உனக்கு சத்தம் கொடுத்துக் கொண்டே வருகிறார். தன்னுடைய ஊழியரை அனுப்பி தம்முடைய வார்த்தைகளை அவர்கள் மூலமாய் ஒலிக்கச் செய்கிறார். வேத வசனங்களின் மூலம் உன்னைப் பார்த்து குரல கொடுக்கிறார். ஆலய ஆராதனையிலே உன்னைக் குரல் கொடுத்து அழைக்கிறார். தீர்க்கதரிசனங்கள் மூலமாய் குரல் கொடுக்கிறார் முடிவு கால சம்பவங்களின் மூலமாய் குரல் கொடுக்கிறார் அவருடைய வருகை சமீபமாகிவிட்டது என்று அறிந்து நீ அவரண்டை திரும்பும்படி உன் ஆத்துமாவின்மேல் அக்கறையுள்ளவராய் இருக்கிறார் என்பதை மறந்து போகாதே.

மேய்ப்பன் குரல் கேட்டு காணாமல் போன அந்த ஆடு பதில் குரல் கொடுத்தால் என்றால் மேய்ப்பன் அந்த குரல் வந்த திசையை நோக்கி நடந்து செல்லான். ஒருவேளை அந்த ஆடு மலைசரிவிலே முட்களின் மத்தியிலே தலை சிக்கியிருக்கும் என்றால் அந்த பள்ளத்தாக்குகளில் மேய்ப்பன் இறங்குவான். முட்களை நோக்கி கஷ்டப்பட்டு இறங்கி கடந்து வருவான். முட்கள் தன்மேல் குத்தினாலும் பரவாயில்லை என்று உயிரையும் பொருட்படுத்தாமல் அது குத்தி கிழிக்க ஆட்டை மீட்கிறான்.

தேவனுடைய பிள்ளையே, இயேசு உனக்காக பரலோகத்திலிருந்து பூமிக்கு இறங்கி வந்தார். அவர் உன்னைத் தேடி நீ இருக்கும் இடத்திற்கே நடந்து வந்தார். மற்ற எல்லா மார்க்கங்களிலும் மனுஷன் தான் கடவுளைத் தேடி நடக்கிறான். புண்ணிய ஸ்தலங்களிலே போய் கடவுளைத் தேடுகிறான். புனித ஆற்றிலே நீராடி கடவுளைத் தேடுகிறான். ஆனால் கிறிஸ்தவ மார்க்கத்திலோ நம் அருமை

வர் நம்மைத் தேடி வந்தார். நாம் அவரை தேட தெரிந்துகொள்ளவில்லை. ஆனால் நம்மை அவர் ர்; தெரிந்துகொண்டார்!

பமாகிய முட்களில் நாம் சிக்கியிருப்போம் என்றால் ப்பன் அந்த சாபத்தை விலக்குகிறார். முட்களை எல் தள்ளி ஆட்டை வெளியேக் கொண்டுவர மிகவும் க்கிறார். அடர்த்தியான முட்களை விலக்கும்போது நேரிடும் தெரியுமா? அந்த கொடிய முட்கள் எல் யப்பனுடைய கரத்திலே குத்தும். கைகளை வேத த்தும், கிறிப்போடும்.

லபிள்ளையே, அந்த மேய்ப்பன்தான் நமக்காக தலை ள்முடி சூட்டப்பட்டார். அந்த முட்கள் அவரது ஆழமாய் இறங்கி இரத்தத்தை பீறப்பண்ணி ந்த முட்கள்தான் ஆணிகளாய் மாறி அவரு கரங்களைத் துளைத்தது அவருடைய பாதங்களை து.

ந்து போனதைத் தேடி வந்த ஆண்டவர் அந்த களை எல்லாம் பொருட்படுத்தாமல் நம்மை மீட் த்துவானார். காணமல் போன ஆட்டைக் கண்டு மய்ப்பனுக்கு இருக்கும் அன்புக்கு அளவே இல்லை. ல் குத்துகிற முட்களின் வேதனை அவனுக்கு டாய் தெரிவது இல்லை.

ன் என்ன செய்கிறான் தெரியுமா? அந்த ஆட்டை தன் தோள்களின்மேல் வைத்து தூக்கி சுமந்து டு போகிறான். தேவபிள்ளையே, இயேசுகிறிஸ்து க முள்முடி சூட்டப்பட்டவர் மாத்திரமல்ல, க பாடு அனுபவித்த தேவன் மாத்திரமல்ல. உன் மக்கிற கர்த்தராகவும் இருக்கிறார் என்பதை மறந்து த. சிலுவை சுமந்த தோள்களிலே உன்னை ஒவ் ளும் தூக்கி சுமந்துகொண்டு வருகிறார்

காணுமல் போன ஆட்டைக் கண்டுபிடித்த ச
ஷத்தை அவரால் அடக்கிக் கொள்ள முடியவில்லே.
மேய்ப்பன் தன் நண்பர்களே எல்லாம் அழைக்கிருன்
ஆடு காணுமல் போனது. ஆனுல் மறுபடியும் அதை
கண்டுபிடித்தேன். இழந்து போனதை மீண்டும் பெ
கொண்டேன். என்னேடுகூட சந்தோஷப்படுங்கள்
சொல்லி சந்தோஷப்படுகிருன்.

தேவனுடைய பிள்ளேயே, நீ இயேசுவண்டை
வாய் என்ருல் உன்னுடைய பாவங்கள் கழுவப்பட்டு
ருடைய இரத்தத்திலுல் கழுவப்படுவாய் என்ருல்
டைய உள்ளத்திலும் சந்தோஷம் வருகிறது. க
டைய உள்ளத்திலும் பெரிய சந்தோஷம் வருகிறது
திரமல்ல, பரலோக தேவதூதர்கள் மத்தியிலும் மிக
சந்தோஷம் உண்டாகிறது இயேசு சொன்ஞர்:
திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில்
சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச்
லுகிறேன்" (லூக் 15:7)

2. காணுமல்போன வெள்ளிக் காசு

"அன்றியும், ஒரு ஸ்திரீ பத்து வெள்ளிக் காசை
யுடையவளாயிருந்து, அதில் ஒரு வெள்ளிக்காசு கா
போனுல், விளக்கைக் கொளுத்தி, வீட்டைப் பெ
அதைக் கண்டுபிடிக்கிற வரைக்கும் ஜாக்கிரதை
தேடாமலிருப்பாளோ?" (லூக் 15:8).

இஸ்ரவேலிலே திருமணமாகப்போகிற பெ
வெள்ளிக் காசுகளே சேகரிப்பார்கள். பத்து வெள்
களைச் சேர்த்து ஒரு ஆரமாக சேர்த்து கட்டிக் கொ
வார்கள். அதை அவர்கள் திருமணமாகிறதற்கு
யாளமாய் ஒரு அந்தஸ்தைக் கொடுக்கிறது.

இங்கே இந்த ஸ்திரீக்கு பத்து வெள்ளிக் கா
தது. ஆனுல் எப்படியோ ஒரு வெள்ளிக்காசு எ

மல் போய்விட்டது. எங்கே விழுந்துவிட்டது என்று
க்குத் தெரியவில்லை.

மல் போன ஆட்டுக்கு குரல் கொடுத்தால் அது
குரல் கொடுக்கும். ஆனால் வெள்ளிக் காசுக்கு குரல்
த்தால் அது என்ன பதில் சத்தம் கொடுக்க முடியும்?
த் தேடி கண்டுபிடிப்பதைப் பார்க்கிலும் வெள்
சை தேடுவது அதிக கடினமாய் இருக்கும்
வா?

ந்த ஸ்திரீ என்ன செய்தாள் தெரியுமா? உடனே
க் கொளுத்தினாள். வீட்டை பெருக்கினாள்.
யாய் தேட ஆரம்பித்தாள். கரிசனையோடு,
ோடு, பாரத்தோடு தேடி இருந்திருப்பாள்.

ன்பது வெள்ளிக் காசு அவளிடம் இருக்கிறது பத்
வெள்ளிக் காசு அவளிடம் இல்லை. பத்தாவது
காசுதான் மிகமிக முக்கியமானது.

வேளை ஆண்டவர் உனக்கு ஒன்பது வரங்களை
ருக்கலாம். ஒன்பது ஆவிக்குரிய கனிகளையும்
ருந்திருக்கலாம். ஆனால் பத்தாவதான அந்த ஒன்று
ம் இருக்கிறதா? கர்த்தர் உன்னோடு இருக்கிறாரா?

து வகையான ஆசீர்வாதங்களை நீ பெற்று இருந்
ாம். வேலை உனக்கு இருக்கலாம், குடும்பம் இருக்
, வீடு இருக்கலாம், செல்வம் இருக்கலாம், செல்
இருக்கலாம், அந்தஸ்து இருக்கலாம். ஒன்பது மேன்
உன்னிடத்தில் இருக்கிறது உண்மைதான். ஆனால்
மிக முக்கியம் கர்த்தர் உன்னோடு இருக்கிறாரா
தான். இயேசு உன்னோடு இல்லாமல் இருந்தால்
ளினாலும் வல்லமையினாலும் எந்த பிரயோஜனமும்
.

ன்றக்கு கர்த்தர் மார்த்தாளைப் பார்த்து,
யானது ஒன்றே" என்று சொன்னார். உன்னை

விட்டு எடுபடாத நல்ல பங்காகிய இயேசு உன்னோ
இருக்கிறாரா? அதுதான் முக்கியம்.

சிலர் பக்தியாய் இருப்பதைப்போல காட்சி அளி
லாம். ஆனால் இயேசு அவர்களோடு இல்லை என்பு
அவர்களுடைய உள் உணர்வு அவர்களுக்கு உணர்த்து
சிம்சோன் தன்னோடுகூட தேவன் இருக்கிறதாக எண்ணி
கொண்டான். ஆனால் கர்த்தரோ அவனை விட்டு வி
விட்டார். கர்த்தர் அவனை விட்டு விலகி இருந்ததை அ
அறியாமல் பரிதாபமாய் வாழ்ந்தான்.

இஸ்ரவேலிலே பெரிய நியாயாதிபதியாய் இ
தான். பலவானாய் இருந்தான். மேன்மையுள்ளவ
இருந்தான். இஸ்ரவேலிலே நியாயம் விசாரிப்பவ
இருந்தான் ஒன்பது மேன்மையான காரியங்கள் அவ
டத்தில் இருந்தது ஆனால் பத்தாவதான கர்த்தரே
அவனை விட்டு விலகிப் போய்விட்டார்.

தேவபிள்ளையே, இன்று உன்னை ஆராய்ந்துப் பா
கர்த்தர் உன்னோடு இருக்கிறாரா? ஒருவேளை படிப்பு இ
கலாம், செல்வம் இருக்கலாம், வேலை இருக்கலாம், உ
யோகம் இருக்கலாம். அவை பெரியது அல்ல. கர்த்தர் உ
னோடுகூட இருக்கிறாரா? நீ கண்களை மூடி ஜெபிக்க ஆ
பிக்கும்போது கர்த்தருடைய பிரசன்னத்தை உணர மு
கிறதா? ஒருவேளை இன்று இரவு கர்த்தருடைய வருசை
இருக்குமென்றால் அவருடைய மகிமையான வருகையி
நீ காணப்படுவாயா?

உன்னதப்பாட்டு 3:1-ஐ வாசித்துப் பாருங்கள். சு
மித்தி சொல்லுகிறாள்: "இராக்காலங்களில் என் படுக்கை
யிலே என் ஆத்தும நேசரைத் தேடினேன்; தேடியும் நா
அவரைக் காணவில்லை. நான் எழுந்து நகரத்தின் வீதிக
ளும் தெருக்களிலும் திரிந்து, என் ஆத்தும நேசரைத் தே
டுவேன் என்றேன்; தேடியும் நான் அவரைக் காணவில்லை
(உன் 3:1,

உன்னதப்பாட்டு 5-ம் அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள். ''என் நேசருக்குக் கதவைத் திறந்தேன்; என் நேசரோ இல்லை, போய்விட்டார்; அவர் சொன்ன வார்த்தையால், என் ஆத்துமா சோர்ந்துபோயிற்று அவரைத் தேடினேன், அவரைக் காணவில்லை'' (உன் 5:6)

நேசர் வாசற்படியிலே நின்று தட்டிக்கொண்டே அழைத்துப் பார்த்தார். என் பிள்ளை கதவைத் திறக்காதா? என் சத்தத்துக்கு செவிக் கொடுக்காதா? இரவிலே பெய்யும் பனியினாலும் தூறலினாலும் அவரது தலை நனைந்து கொண்டே இருந்தது இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன் என்று சொல்லி தட்டிக் கொண்டே நின்றார். கதவைத் திறக்காததினால் அவர் போய் விட்டார்.

அவர்தான் முக்கியமானவர். படுக்கை முக்கியமல்ல, தூக்கம் முக்கியமல்ல, கர்த்தரே முக்கியமானவர். பத்தாவது வெள்ளிக்காசுதான் முக்கியமானது.

தேவபிள்ளையே, கிறிஸ்து உன்னோடு இருக்கிறாரா? அல்லது அவரை நீ இழந்து இருக்கிறாயா? உன்னுடைய உள்ளத்தை ஆராய்ந்துப்பார். இயேசு சிறுவனாய் இருந்த போது இயேசுவின் தாய் இயேசு தன்னோடு இருக்கிறதாக எண்ணினாள். மூன்றாவது நாளில்தான் இயேசு தன்னோடு இல்லை என்பதை கண்டுகொண்டாள். இனத்தவர்களிடம் போய் தேடினாள். உறவின் முறையானவர்களிடம் போய் தேடினாள். ஆனால் இயேசுவைக் காணோம். எத்தனை பரிதாபமான காரியம்! இயேசுவைத் தேடி மீண்டும் எருசலேமுக்கு வந்தார்கள் இயேசு இருக்கிற இடத்திற்கு தேடி வந்தார்கள். நீ இயேசுவைத் தேடுவாய் என்றால் உன் வாழ்க்கை ஆசீர்வாதமாய் இருக்கும்.

ஒரு முறை நான் மலேசியாவிற்கு ஊழியத்திற்கு போயிருந்தபோது டிரைவர் ஒருவரைச் சந்தித்தேன். அவர் சொன்னார் ஐயா, ஒரு காலத்தில் நான் இயேசுவை

ஏற்றுக்கொண்டு அவருடைய பிள்ளையாய் இருந்தேன். அவரை ஆடி பாடி துதித்தேன். ஒவ்வொரு ஆராதனையிலும் பங்குகொண்டு ஆவியிலே அனல் அடைந்திருந்தேன்.

ஆனால் என்னுடைய கம்பெனி முதலாளி ஒரு நாள் என்னை அழைத்தார். உனக்கு குடும்ப கஷ்டம் அதிகமாய் இருக்கிறது அல்லவா? உன்னுடைய வேலை நேரம் தவிரவும் கூட கொஞ்ச நேரம் ஓட்டு அதிக சம்பளம் தருகிறேன் என்றார் நான் சம்மதித்தேன். பின்பு ஞாயிற்றுக்கிழமை ஓட்டினால் இரண்டு மடங்கு அதிக சம்பளம் தருவேன் என்றார். நான் அதற்கும் சம்மதித்தேன். முடிவிலே ஆலயத்திற்கு போக நேரம் இல்லாமல் போனது. தனி ஜெபத்திற்கு நேரம் இல்லாமல் போனது. தேவனுடைய பிள்ளைகளோடு ஐக்கியம்கொள்ள நேரம் இல்லாமல் போனது எல்லாவற்றிற்கும் மேலாக கர்த்தரை நான் இழந்தேன்.

ஒரு நாள் அவர் நடு இரவிலே லாரி ஓட்டிக் கொண்டிருக்கும்போது தன்னை அறியாமல் சில வினாடி கண்களை மூடி தூங்கிவிட்டார் அவ்வளவுதான் வேகமாய் சென்று கொண்டிருந்த லாரி பாதை மாறினது. தடதட என்ற சத்தம் கேட்டது. அவர் கண்களை விழித்து பார்த்தபோது மலை உச்சியிலிருந்து பாதாளத்தை நோக்கி பயங்கரமாய் லாரி கட்டுப்பாடு இல்லாமல் ஓட ஆரம்பித்தது. அடுத்த நிமிடம் லாரி பல ஆயிரம் முறை உருளபோகிறது. மலை அடிவாரத்திலுள்ள பாறைகளின் மேல் மோதி நொறுங்கப் போகிறது. என்ன செய்வது? எப்படி லாரியை காப்பது? எப்படி தன்னுடைய உயிரை பாதுகாப்பது?

அவர் சொன்னார், ''என் முழு பெலத்தோடும் இயேசுவே என்று குரலை எழுப்பினேன் இயேசுவே காப்பாற்றும்'' என்று கதறினேன். மறுவினாடி ஒரு வெண்மையான கரம் அந்த ஸ்டியரிங்கைப் பிடித்தது அந்த கரம் தான் லாரியை திருப்பினது. பாதாளத்திற்கு நேராய் சென்ற அந்த லாரியை மீண்டும் ரோட்டிலே வந்து நிறுத்தியது லாரி நின்றது, கரமும் மறைந்தது.''

அந்த சகோதரனுடைய கை கால்கள் எல்லாம் நடுங்க லாரியிலிருந்து கீழே குதித்து பயபக்தியோடு முழங்கால் படியிட்டார்.

''ஆண்டவரே, உம்மை விட்டுவிட்டு பணத்தின் பின் னல் ஓடினதினுல் என் வாழ்க்கை பாதாளத்திற்கு நேராக அல்லவா ஓடிக்கொண்டிருந்தது. உம்மை விட்டுவிட்டு என் ஆத்துமாவை நஷ்டப்படுத்தி உலகத்தின் செல்வங்களை பற்றி பிடித்தேன். ஆனுல் நீரோ உம்முடைய வெண்மையான கரத்தினுல் என் வாழ்க்கை ஸ்டிரியங்கை பிடித்து பாதாளத்திலிருந்து என்னைத் தூக்கி எடுக்க சித்தமானீர். உமக்கே மகிமை'' என்று சொல்லி தேவனை ஸ்தோத்தரித்தார்.

தேவபிள்ளையே, அந்த ஸ்திரீ வெள்ளிக்காசை இழந்ததுபோல நீ இயேசுவை இழந்து இருக்கிருயோ? அவருடைய பிரசன்னத்தை இழந்து போயிருக்கிருயோ? ஜெப ஜீவியத்தை இழந்து போயிருக்கிருயோ? ஆதி அன்பை இழந்து போயிருக்கிருயோ? இழந்து போனதைத் தேடி வந்த ஆண்டவர் நீ இழந்துபோன எல்லாவற்றையும் உனக்குத்தர வல்லமையுள்ளவராக இருக்கிருர்.

அந்த பத்தாவது வெள்ளிக்காசை தேடி அந்த ஸ்திரீ செய்த முதல் காரியம் என்ன? ஆம், அவள் விளக்கைக் கொளுத்தினுள். அந்த விளக்குதான் வேதபுத்தகம். வேதத்தின் வெளிச்சத்தில்தான் ஒரு மனுஷன் தன்னை ஆராய்ந்து பார்க்க முடியும். வேத வசனங்களோடு ஒப்பிடும்போது தான் அவனுடைய ஆவிக்குரிய நிலைமை எப்படி இருக்கிறது என்று கண்டு பிடிக்க முடியும்.

ஆகவேதான் தாவீது ராஜா சொல்லுகிருர், ''உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிக்கிறது'' (சங் 119:105). கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது

மாய் இருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும் பேதையை ஞானியாக்குகிறதுமாய் இருக்கிறது
(சங் 19:7).

ஒருவனும் விளக்கைக் கொளுத்தி அதை மரக்காலினால் மூடி வைக்க மாட்டான். அதை விளக்கு தண்டின்மேல் வைக்கும்போது அது வீடு முழுவதிற்கும் வெளிச்சம் கொடுக்கும். தேவபிள்ளையே, நீ வேதத்தை வாசிக்கும் போது அந்த வேத வசனத்தின் வெளிச்சத்தில் உன்னை ஆராய்ந்துப்பார். கர்த்தர் உன்னோடு இருக்கிறாரா இல்லையா என்பதை கண்டுபிடி.

இரண்டாவது அந்த ஸ்திரீ என்ன செய்தாளாம் தெரியுமா? விளக்கைக் கொளுத்தினதோடு நின்று விடவில்லை. அவள் வீட்டை பெருக்கினாள். அழுக்கை எல்லாம் நீக்கி துப்புரவு செய்ய ஆரம்பித்தாள். இது எதைக் காட்டுகிறது? நம்முடைய வாழ்க்கையில் வந்த பாவங்கள் சாடங்கள் எல்லாம் இயேசுவின் இரத்தத்தினால் கழுவி சுத்திகரிக்க வேண்டும். தூசு போன்ற பாவங்களை அகற்ற வேண்டும். குறைவுகளை எல்லாம் நீக்க வேண்டும் என்பதைக் காண்பிக்கிறது

அவள் வீட்டை பெருக்கி வெள்ளிக்காசை கண்டு பிடிக்க முயற்சித்ததுபோலவே தாவீது ராஜா தேவசமுகத்தில் நின்று, ''தேவனே நீர் என்னை ஆராய்ந்துப்பாரும், வேதனை உண்டாக்குகிற வழிகள் என்னிடத்தில் உண்டோ என்று நீர் பார்த்து நித்திய வழியிலே என்னை நடத்தும்'' என்று ஜெபித்தார்.

நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம். தேவபிள்ளையே, உன்னை நீயே ஆராய்ந்துப்பார். வெள்ளிக்காசை கண்டுபிடிக்கிற வரையிலும் ஓய்ந்துவிடாதே. நீ தேடினால் கண்டடைவாய். தேடுகிறவனும் கண்டடைந்து பெற்றுக்கொள்ளுகிறான்.

கண்ணீரோடு தேடிய அந்த ஸ்திரீ காணமற்போன வெள்ளிக்காசை கண்டுபிடித்து விட்டாள். அவளுக்கு எத்தனை சந்தோஷம். தன் சிநேகிதிகள் அயல்வீட்டாரை கூடிவரச்செய்து காணமல்போன வெள்ளிக்காசை கண்டு பிடித்தேன், என்னோடுகூட சந்தோஷப்படுங்கள் என்றாள்.

தேவபிள்ளையே, பரலோகத்தில் இன்று ஒரு பெரிய மகிழ்ச்சியை உண்டாக்கும்படி கர்த்தரை தேடிக் கண்டு பிடித்துப் பற்றி பிடித்துக்கொள்.

3. காணமல் போன மகன்!

மூன்றாவதாக இந்த உவமையைப் பாருங்கள். முதல் உவமையிலே நூறு ஆடுகளிலே ஒரே ஒரு ஆடுதான் காண மல் போனது. மேய்ப்பன் அவ்வளவாய் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. தொண்ணூற்றொன்பதிலே அவன் திருப்தி பட்டுவிடக்கூடும். அதுபோலவே பத்து வெள்ளிக்காசிலும் ஒரு வெள்ளிக்காசு காணமல் போகும் போதுகூட ஒருவேளை அந்த ஸ்திரீ தன்னை தேற்றிக் கொள்ளக் கூடும். ஆனால் இந்த தகப்பனாரைப் பாருங்கள். அவனுக்கு இருப்பதோ இரண்டே இரண்டு குமாரர்கள். அதில் ஒருவன் காணமல் போய்விட்டால் அவன் எவ்வள வாய் துடிப்பான்!

முதலில் நூறில் ஒன்றைப் பார்த்தோம் பின்பு பத்தில் ஒன்றைப் பார்த்தோம். இப்பொழுதோ இரண்டில் ஒன்றை தகப்பன் தேட வேண்டியது இருக்கிறது. பாதிக்கு பாதி காணமல் போனதாக இருக்கிறது அல்லவா?

ஒரு வேளை ஒரு மனுஷன் ஆட்டை இழக்கலாம், மாட்டை இழக்கலாம், வெள்ளிக்காசை இழக்கலாம், தங்கக் காசை இழக்கலாம். ஆனால் சொந்த பிள்ளையை இழக்க யாரும் விரும்ப மாட்டார்கள். ஆட்டைப்பார்க்கி லும், வெள்ளிக்காசைப் பார்க்கிலும், மனுஷன் அதிக விசேஷமுள்ளவன் அல்லவா? ஆகாயத்துப் பறவைகளைப்

பார்க்கிலும், காட்டு புஷ்பங்களைப் பார்க்கிலும் மனுஷன் விசேஷமுள்ளவன் அல்லவா. ஆம், நமக்குள் விசேஷமான ஒன்று இருக்கிறது. அதுதான் நம்முடைய ஆத்துமா. நம்முடைய ஆத்துமாவை நாம் ஒருபோதும் இழந்துபோய் விடவேக்கூடாது.

இந்த சம்பவத்தைப் பாருங்கள். இரண்டு பிள்ளைகளிலே இளையவன் தகப்பனிடத்திலே வருகிறான். அப்பா சொத்திலே என்னுடைய பாகத்தை பிரித்து எனக்குக் கொடுத்து விடுங்கள். நான் உலகத்தின் சிற்றின்பங்களை அனுபவிக்கப்போகிறேன், என் நண்பர்களோடு உல்லாசமாய் திரிய விரும்புகிறேன் என்று கேட்கிறான். எந்த தகப்பன் தான் சொத்தை பிரித்துக்கொடுக்க பிரியப்படுவான். இஸ்ரவேல் தேசத்திலே தகப்பனுடைய மரணத்திற்கு பிறகுதான் சொத்தை பங்கிடுவார்கள் தகப்பன் உயிரோடு இருக்கும்போது ஒரு மகன் சொத்தைப் பிரித்து கேட்பான் என்றால் அது தகப்பனை கொன்றுபோடுவதற்கு சமமாய் கருதப்பட்டது.

ஆனால் இந்த மகனைப்பாருங்கள். தகப்பனை உயிரோடு வைத்துக்கொண்டே எனக்கு பிரித்து கொடுத்துவிடு என்று சொல்லுகிறான். அதனுடைய அர்த்தம் என்ன? நீர் எனக்கு வேண்டாம், உம்முடைய அன்பு எனக்கு வேண்டாம், உம் பணம்தான் எனக்கு வேண்டும் என்பதைப்போல இருக்கிறது.

மாத்திரமல்ல, அவன் ஒரு நல்ல குறிக்கோளுக்குக் கேட்டாலும் பரவாயில்லை. வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கோ, புதுதொழில் தொடங்கவோ தகப்பனிடத்தில் கேட்டால் ஒருவேளை தகப்பன் சந்தோஷப்பட்டு கொடுத்து இருந்திருப்பான். ஆனால் இளைய குமாரனுடைய நோக்கமே வித்தியாசமாய் இருந்தது. தகப்பன் துயரத்தோடு பங்கை பிரித்துக்கொடுத்தான். அவன் அதை எடுத்துக்கொண்டு துன்மார்க்கமாய் ஜீவனம்பண்ணினான்.

வேசிகளிடத்தில் போய் அத்தனை செல்வத்தையும் அழித்துப் போட்டான்.

ஒவ்வொரு முறையும் அந்த ஊர் மக்கள் அந்த தகப்பனிடத்தில் வந்து ஐயா உங்களுடைய மகன் அந்த ஊரிலே குடித்து தெருவிலே கிடக்கிறான். வேசிகளின் பின்னால் போய் ஊர் ஜனங்களிடம் அடி வாங்கி கட்டிக் கொண்டான் என்றெல்லாம் சொல்லும்போது அந்த தகப்பனுடைய உள்ளம் எவ்வளவாய் புண்பட்டு இருந்திருக்கும்! தகப்பன் அதைத் தாங்கிக்கொள்ள முடியாமல் துடித்து போயிருந்திருப்பான்.

சற்று சிந்தித்துப் பாருங்கள். தகப்பன் அந்த மகனைத் தேடிப்போனானா? அப்படி சொல்லப்படவில்லை. ஆட்டைத் தேடி மேய்ப்பன் போனான். வெள்ளிக்காசை தேடி ஸ்திரீ போனாள். காரணம் ஆடுகளுக்கு திரும்பி வரும் வழி தெரியாது. வெள்ளிக் காசும் எழுந்து நடந்து வர முடிவது இல்லை. ஆனால் மனிதனோ கர்த்தரண்டை திரும்பி வர முடியும். அவன் அறிவு உள்ளவன். சிந்தனை சக்தி படைத்தவன். அவனுக்கு ஆத்துமா உண்டு. ஆகவே தகப்பன் தான் மகனுக்காக ஆவலோடு காத்திருந்தார்.

தகப்பன் தன்னுடைய மகன் மனந்திரும்பி புது மனிதனாய் உணர்வடைந்து திரும்பி வரவேண்டுமென்று விரும்புகிறார் கட்டாயப்படுத்தி கழுத்தைப் பிடித்து தள்ளிக் கொண்டு வர அவர் பிரியப்படுவதில்லை. தேவபிள்ளையே, நீயாக மனந்திரும்பி கண்ணீரோடு அவரண்டை வர வேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிறார்.

கர்த்தரை விட்டு தூரமாய் போகிறவர்களுடைய வாழ்க்கை எத்தனை வேதனையானது! முடிவு எத்தனை ஆபத்தானது! அன்புள்ள தகப்பனைவிட்டு பிரிந்துபோன கெட்ட குமாரனுடைய வாழ்க்கை எப்படி சீரழிந்தது என்பதை கவனித்துப் பாருங்கள். பன்றிகளுக்கு கொடுக்கக்கூடிய தவிட்டினாலே அவன் தன் வயிற்றை நிரப்புவதற்கு ஆசையாக இருந்தான். அதுகூட அவனுக்குக்

கிடைக்கவில்லை. பன்றிகளில் ஒரு பன்றியைப் போல கிடந்து பன்றிகளுக்குக் கிடைக்கும் தவிடாவது தனக்குக் கிடைக்கும் என்று எண்ணினான். அது மூலமாவது தன் வயிறு நிறையாதா என்று அங்கலாய்த்தான். பாவம் அந்த தவிடுகூட அவனுக்குக் கிடைக்கவில்லை. எத்தனை வேதனையான காரியம்!

இப்படித்தான் உலக ஆசை இச்சைகள் ஒரு மனிதனை இழுத்துக் கொண்டு போய், கடைசியில் துயரமான சூழ் நிலைக்குள் தள்ளி விடுகிறது. பாவம் அவனுடைய சரீரத்தைக் கெடுத்தது. ஆரோக்கியத்தைக் கெடுத்தது பெலத்தைக் கெடுத்தது. முடிவிலே பன்றிகளின் மத்தியிலே தவிக்க வேண்டியது வந்தது. வியாதியும் நோயும் சரீரத்தை ஒடுக்குகிறது.

ஒரு நாள் அவனுக்குப் புத்தி தெளிந்தது. அவன் சொல்லுகிறான் நான் எழுந்து என் தகப்பனிடத்தில் போய் தகப்பனே பரத்திற்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன். இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்ல, உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக் கொள்ளும் என்பேன் என்று சொல்லி எழுந்து புறப்பட்டு வந்தான்.

ஆனால் தகப்பன் என்ன செய்தான் தெரியுமா? மகனுக்காக அன்போடுகூட காத்திருந்தான். மகன் வருவதை தூரத்திலிருந்து பார்த்துவிட்டான். கெட்டகுமாரன் திரும்பி வருவதை வேறு ஒருவரும் முதலில் பார்க்கவில்லை. அவனுடைய அண்ணனும் பார்க்கவில்லை. குடும்பத்திலுள்ள எந்த வேலைக்காரரும் பார்க்கவில்லை. தகப்பன் தான் முதன் முதலில் பார்த்தான். வேதம் சொல்லுகிறது, "அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி, ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தான்"

(லூக் 15:20).

தகப்பனுடைய உள்ளத்தில் அவ்வளவு அன்பு வைத்த வர் தம்முடைய உள்ளத்தில் எவ்வளவு அதிகமான அன்பு வைத்திருப்பார்! தேவபிள்ளையே, நீ ஒரு அடி வைத்து ஆண்டவரை தேடிக்கொண்டு வரும்போது ஆண்டவர் ஆயிரம் அடி வைத்து உன்னை எதிர்கொண்டு வர ஆவ லுள்ளவராய் இருக்கிறார். நீ ஆண்டவரைத் தேட உன் இருதயத்தைக் கொஞ்சம் திறக்கும்போது அவர் முழுவது மாய் உன் பக்கமாய் திரும்பி உன்னை ஆசீர்வதிக்க ஆவ லுள்ளவராயிருக்கிறார். உன் நிமித்தம் அவர் உள்ளம் பொங்குகிறது

உன்னை மீட்டுக்கொள்ள, அரவணைத்துக்கொள்ள, உன்னை புது சிருஷ்டியாக மாற்றி உன்னதத்திற்குரிய சகல ஆசீர்வாதங்களினாலும் உன்னை நிரப்ப அவருடைய உள்ளம் ஆவலாய் காத்துக் கொண்டிருக்கிறது.

கெட்டகுமாரன் தகப்பனண்டை திரும்ப ஓடி வந்த தைப்போல தேவபிள்ளையே, இந்த இரவு நீ அவரண்டை ஓடி வந்துவிடு. அவருடைய அரவணைக்கிறக் கரத்தை நோக்கி ஓடி வந்துவிடு. நீ எந்த நிலைமையில் இருந்தாலும் அவர் உன்னை ஏற்றுக் கொள்ளுவார்.

அன்றைக்கு அந்த தகப்பன் மகனை அருவருக்கவில்லை. பன்றியோடு இருப்பவன் அல்லவா? பன்றியின் வாசனை அவன் மேல் வீசுமே என்று கவலைப்படவில்லை. மகனுடைய கழுத்தை கட்டிக்கொண்டு அவனை முத்தஞ் செய்தான். உயர்ந்த வஸ்திரத்தைக் கொடுத்தான். கைகளிலே மோதி ரத்தை போட்டான். நல்ல விருந்தை ஆயத்தம் செய்தான் மகிழ்ச்சியோடு சொன்னான், ''என் மகன் மரித்தான் திரும்பவும் உயிர்த்தான்.'' காணாமல் போனவன் திரும்ப வும் காணப்பட்டான் அப்படியே தகப்பன் வீட்டிலுள்ள வர்கள் அனைவரும் சந்தோஷப்பட ஆரம்பித்தார்கள்.

தேவபிள்ளையே, இன்று நீ கர்த்தரண்டை வருவாய் என்றால் உன் நிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம்

உண்டாகி இருக்கும். இழந்துபோனதைத் தேடும்படி வந்த ஆண்டவர் உன்னைத் தேடி வந்திருக்கிறார்.

நீ இழந்துபோனவனாய் காணப்படுகிறாயா? சந்தோஷத்தை இழந்து போனாயோ? எதை இழந்துபோய் கண்ணீரோடு நிற்கிறாய்? நிம்மதியில்லாமல் நடமாடி திரிகிறாய்? கவலைப்பட்டு சஞ்சரித்துக் கொண்டிருக்கிறாய்? இந்த பெரிய உலகத்தில் நான் ஒரு அனாதையைப் போல இருக்கிறேன் என்று சொல்லுகிறாயா? இயேசுவண்டை வா.

வருத்தப்பட்டு பாரஞ் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று அழைக்கிறார். தன்னண்டை வருகிறவர்களை அவர் ஒருபோதும் புறம்பே தள்ளுவது இல்லை. இந்த நேரம் நீ கர்த்தருக்கு முழு இருதயத்தை ஒப்புக்கொடுக்கிற நேரமாய் இருக்கிறது. முழங்கால்படியிட்டு இயேசுவே நான் ஒரு பாவி இப்பொழுதே கண்ணீரோடு உம்மண்டை வருகிறேன். என்னுடைய பாவங்களை மன்னித்து உம்முடைய பிள்ளையாய் ஏற்றுக்கொள்ளும் என்று சொல்லுவாயா?

இதோ, கர்த்தர் உன் அருகில் வருகிறார். உன் வாழ்க்கை முற்றிலுமாய் மாறுகிறது. இதோ, தேவ ஆவியானவர் உன்னை புதிய சிருஷ்டியாக மாற்றுகிறார். இதுவரை பின் தொடர்ந்த தோல்விகள், இதுவரை உன்னைத் தொடர்ந்த பாவ போராட்டங்கள், தீய பழக்க வழக்கங்கள் இனி உன்னை ஒருபோதும் மேற்கொள்ளுவது இல்லை. இழந்து போனதைத் தேடும்படி வந்த ஆண்டவர் அன்போடு உன்னை அரவணைத்துக்கொள்ளுகிறார் அவரிலே மகிழ்ந்து களிகூருவாயா? ஆமென், அல்லேலூயா!

ஆவிக்குரிய நூல்கள்

ஆவிக்குரிய ஜீவியத்தில் வளருவதற்கும், ஆத்துமா பெலன் கொள்வதற்கும் ஆவிக்குரிய நூல்கள் இன்றியமையாதவை.

ஏறக்குறைய 235 க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதிய சகோ. J. ஜெபத்துரை அவர்கள் இந்நூலையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

பதினாறு ஆண்டுகள் அரசாங்கத்தில் பணியாற்றிய அவர், தன் வேலையை ராஜினாமா செய்துவிட்டு முழுநேர ஊழியத்தில் 1985 ஆண்டு தீவிரமாக இறங்கினார். வல்லமையான மேடைப் பேச்சினாலும் எழுத்து ஊழியத்தினாலும் ஆயிரக்கணக்கானோரை அவர் கர்த்தருக்குள் வழி நடத்தியிருக்கிறார். இவர் கர்த்தரின் எழுத்தாணி.

புத்தக ஊழியத்தை ஊக்குவியுங்கள். அனேக ஆவிக்குரிய புத்தகங்கள் வெளிவர ஜெபியுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

புஸ்தகங்கள் கிடைக்கும் இடம் :

சாம் ஜெபத்துரை, M. A,

50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம், சென்னை - 600 024.